# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2388 - 2024 ජූනි මස 07 වැනි සිකුරාදා - 2024.06.07

*2388 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | *496* |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

முச்சக்கரவண்டித் தரிப்பிடங்களைப் பிரகடனப்படுத்தல்

மாகாணசபையின் உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தான தத்துவங்களின் பிரகாரம் வடமாகாண உள்ளூராட்சி விடயத்துக்கு பெறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தகமான பத்திரிகையின் மூலல் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள நியமத்துணைவிதிகளின் மூலமும் எமது சபையின் 2029 ஆம் இலக்க 2017.07.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமான பத்திரிகையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி அறிவித்தலுடன் பின்வரும் விடயங்களை சேர்த்து வாசிக்கப்படுவதுடன் சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரமும் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் தரிப்பிடங்களை ஒழுங்குபடுத்தும் வகையிலும் முச்சக்கரவண்டிகள் சேவையில் ஈடுபடுவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடங்களினை 2024.03.15 ஆந் திகதி தொடக்கம் அனுமதிக்கப்பட்ட தரிப்பிடங்களாக பிரகடனப்படுத்துவதென 24 ஆம் இலக்க 06.02.2024 ஆந் திகதிய நிர்வாகக்கட்டளை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கமைவாக முச்சக்கரவண்டிகள் சபையின் அனுமதிபெற்று குறித்த தரிப்பிடங்களில் நின்று தமது சேவைகளை வழங்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. அத்துடன் இதற்காக மாதாந்த கட்டணமாக ஒரு முச்சக்கரவண்டிக்கு ரூபா 300.00 அறவிடப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

01. பளை பேரூந்துதரிப்பிட நிலையத்தின் மேற்குப் பக்கமாகவுள்ள சபையின் நிலப்பகுதி

02. புதுக்காட்டுச் சந்தியில் சபைக்குச் சொந்தமான நிலப்பகுதி

03. இயக்கச்சி சந்தையின் முற்பகுதி

த.தர்சினி,
செயவாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை.

பிரதேச சபை அலுவலகம்,
பச்சிலைப்பள்ளி,
பளை.

06-17

---

## பருத்தித்துறை நகரசபை

தீர்மான இலக்கம் : 84/2024 14.05.2024

1. 1939 ஆம் ஆண்டின் நகரசபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்திற்கமைவாக பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் பொது இடங்கள் மற்றும் வீதியோரங்களில் நிறுத்தப்படும் அரசாங்க வாகனங்கள், இலங்கை போக்குவரத்து சேவை வாகனங்கள், மேட்டார்சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கு மணித்தியாலம் ஒன்றுக்கான தரிப்பிடக்கட்டணம் பின்வருமாறு அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கிறேன். இக் கட்டணங்கள் யாவும் 01.06.2024 ஆந் திகதியிலிருந்து அறவிடப்படும். இக்கட்டணங்கள் அரசவரிகள் நீங்கலானவை.

| | | |
|---|---|---|
| (அ) பார ஊர்திகள் | - | 200.00 |
| (ஆ) லொறி, பஸ்வண்டி | - | 100.00 |
| (இ) வான், கார், பட்டா, மினிபஸ், நடுத்தர வாகனங்கள் | - | 50.00 |
| (ஈ) முச்சக்கரவண்டி | - | 30.00 |

*தீர்மான இலக்கம் : 85/2024 - 14.05.2024*

*2.1939 ஆம் ஆண்டின் நகரசபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்திற்கமைவாக குப்பைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், கண்ணாடிகள், பொலித்தீன்கள், உட்பட ஏனைய கழிவுகளை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பொது இடங்கள், வீதிகள், காணிகளில் சட்டவிரோதமாக கொட்டுபவர்களிடமிருந்து ரூபா 5,000.00 தண்டப்பணமாக அறவீடு செய்வதென தீர்மானிக்கிறேன். இந் நடைமுறை 01.06.2024 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும். இக் கட்டணம் அரசவரி நீங்கலானது.*

*3. தீர்மான இலக்கம் : 86/2024 - 14.05.2024*

*1939 ஆம் ஆண்டின் நகரசபை கட்டளைச் சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்திற்கமைவாக 29.12.2023 ஆந் திகதிய 2365 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கான கட்டணங்கள் பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகிறது. இக் கட்டணங்கள் யாவும் 01.06.2024 இல் இருந்து அறவிடப்படும். இக்கட்டணங்கள் யாவும் அரச வரிகள் நீங்கலானவை.*

*(அ) மலக்கழிவு மற்றும் இறால், நண்டு நீர்க்கழிவுகள் அகற்றுதல் சேவைக் கட்டணம் (கலிபவுசர்) - ஒருதடவை*

*1. நகரசபை எல்லைக்குள் - 12,000.00*
*2. நகரசபை எல்லைக்கு வெளியே - 12,000.00+ ஒரு கி.மீற். இற்கு ரூபா 200.00*

*(ஆ) கழிவு நீர் மற்றும் உணவு நீர்க்கழிவுகள் அகற்றுதல் சேவைக் கட்டணம் (கலிபவுசர் ) - ஒருதடவை*

*1. நகரசபை எல்லைக்குள் - 8,000.00*
*2. நகரசபை எல்லக்கு வெளியே - 8,000.00 + ஒரு கி.மீற். இற்கு ரூபா 200.00*

*(இ) குப்பை அகற்றல் கட்டணம் - ஒரு லோட் உழவு இயந்திரம்*

*1. நகரசபை எல்லைக்குள் - 3,000.00*
*2. நகரசபை எல்லக்கு வெளியே - 3,000.00 + ஒரு கி.மீற். இற்கு ரூபா 200.00*

*(ஈ) குப்பை அகற்றல் கட்டணம் - அரை லோட் உழவு இயந்திரம்*

*1. நகரசபை எல்லைக்குள் - 2000.00*
*2. நகரசபை எல்லக்கு வெளியே - 2000.00 + ஒரு கி.மீற். இற்கு ரூபா 200.00*

திருமதி தாரணி கஜரூபன்,
செயலாளர்,
பருதித்துறை நகரசபை.

பருதித்துறை நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
2024 மே 30.

06-29

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.